திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டுப் பட்டுப் பூச்சிகளை வளர்ப்பதன் மூலமாக ஒரு ஏக்கருக்கு 10,000 கூடுகள அல்லது 400 கிலோ பட்டு நூல் கிடைக்கிறது என்றும், ஜப்பான் நாட்டுப் பூச்சிகளை வளர்த்தால் ஒரு ஏக்கருக்கு 17,000 கூடுகள் அல்லது 700 கிலோ பட்டு நூல் கிடைக்கிறது என்றும் கூறப்படுகிறது. ஆகவே, ஜப்பான் பட்டுப் பூச்சிகளை அதிக அளவில் உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் யோசனையைப் பரிசீலித்து, அது உகந்ததாக இருந்தால் செயல்படுத்தப்படும்.

திரு இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுப்பூச்சி வளர்ப்பு பற்றி விவசாயிகள் அறிவதற்காக சினிமாப் படம் எடுக்கப்படும் என்று முன்பொருமுறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தத் திட்டம் எந்த அளவில் உள்ளது ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்மிகு தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

கொமாரபாளையத்தில் நிறுவப்படும் பால் குளிரூட்டும் நிலையம்.

*வினா எண் 4—திரு. ஆர். அரங்கசாமி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சத்தியமங்கலம் தொகுதி, கொமாரபாளையம் கிராமத்தில் தேசிய பால்வள நிறுவனத்தின் மூலம் அமைக்கப்படும் பால் குளிரூட்டும் நிலையத்தின் மதிப்பீடு என்ன ?

(ஆ) நாள் ஒன்றுக்கு எத்தனை லிட்டர் பால் சேமிக்க முடியும் ?

(இ) எப்பொழுது இந்த நிலையம் வேலையைத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) சத்தியமங்கலம் தொகுதி கொமாரபாளையத்தில் நிறுவப்படும் குளிரூட்டும் நிலையத்தின் மதிப்பீடு ரூபாய் 24.875 இலட்சங்கள் ஆகும்.

(ஆ) இக்குளிரூட்டு நிலையம் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் பாலை குளிர்ப்படுத்தும் திறனுடையது.

(இ) இக்குளிரூட்டு நிலையத்தின் கட்டிட வேலை சிறிது காலத்திற்குள் கட்டி முடிக்கப் பெற்று செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1982 பிப்ரவரி 2]

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, குளிரூட்டு நிலையங்கள் இல்லாத காரணத்தால் பல இடங்களில் கிராமக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஆரம்பிப்பது தடைபட்டு இருக்கிறது. இது ஆரம்பித்த பிறகாவது புதிதாக அங்கே பால் உற்பத்தியாளர் சங்கம் தொடங்க அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலாவது பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே விடை அளித்தபடி, காமாரபாளையத்தில் ஒரு சில்லிங் சென்டரும், தாராபுரத்தில் ஒரு சில்லிங் சென்டரும் துவங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. தாராபுரத்தில் சில்லிங் சென்டர் இன்னும் 15-20 நாட்களுக்குள் தொடங்கப்பட இருக்கிறது. சத்தியமங்கலம் தொகுதி காமாரபாளயைத்தில் விரைவில் ஒரு சில்லிங் சென்டர் தொடங்கப்பட இருக்கிறது. இந்த இரண்டும் தொடங்கப்படுகிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னது போல் அங்கே விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்படும்.

சந்தனத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண் 5—திரு. பொ. விஜயராகவன், திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக காடுகளில் கிடைக்கும் சந்தனக் கட்டைகளைப் பயன்படுத்தி சந்தனத் தைலம், சந்தனப் பவுடர், சந்தன சோப் ஆகிய பொருட்களைத் தயாரிக்கும் அரசுத்துறை தொழிற்சாலையை ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசிடமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து இதுவரையில் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) தமிழக காடுகளில் கிடைக்கும் சந்தனக் கட்டைகளைப் பயன்படுத்தி சந்தனத் தைலம் தயாரிக்கும் திட்டம் மட்டுமே அரசிடம் உள்ளது.

(ஆ) இத்தொழிற்சாலையை வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் அருகே நிறுவ, தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் அரசால் பணிக்கப்பட்டுள்ளது.